LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## (EXTERNAL DEGREE)

### First Examination in Bachelor of Business Administration-2008/2009

### (Proper/ Repeat)April/ May/ June-2013

### EXB/EXE 1074 Economic Theory

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. i. விலைசார் கேள்வி நெகிழ்ச்சி என்றால் என்ன? (02 புள்ளிகள்)

   ii. சந்தைச் சமநிலையில் வரி விதிப்பானது எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பதை வரைபடம் மூலம் காட்டுக. (06 புள்ளிகள்)

   iii. அல்பிரட் மார்ஷலினுடைய குறைந்து செல்லும் எல்லைப் பயன் கோட்பாடு பற்றி விளக்கி அவற்றிற்கான எடுகோள்களை தருக. (06 புள்ளிகள்)

   iv. X, Y பொருட்களின் மொத்த பயன்பாட்டு சார்புகளும் தரவுகளும் தரப்பட்டுள்ளன.

   $TU_X = 120x - 10x^2$

   $TUy = 110y - 10y^2$

   $I = 50$ $\quad Px = 10/=$ $\quad Py = 5/=$

   தரப்பட்ட தரவுகளிகளின் படி நுகர்வோன் சமநிலையைக் காண்க. (6 புள்ளிகள்)

   (மொத்தம் 20 புள்ளிகள்)

2. i. உற்பத்தித் தொழிற்பாட்டை வரையறுக்குக. ஒரு குறித்த உற்பத்தித் தொழிற்பாட்டில் நிலையான மற்றும் மாறும் காரணிகளை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

   ii. குறுங்காலத்தில் சராசரி உற்பத்தி வளையிக்கும் சராசரி செலவு வளையிக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (04 புள்ளிகள்)

   iii. நீண்ட கால செலவு கோடானது "U" வடிவில் அமைந்து காணப்படுவதற்கான காரணத்தினை தருக (04 புள்ளிகள்)

iv. உற்பத்திச் செலவு சார்பான எண்ணக்கருக்கள் தொடர்பாக நீர் கொண்டுள்ள அறிவினைக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க

| வெளியீட்டு அலகு | மொத்தச் செலவு (TC) | மொத்த நிலையான செலவு (TFC) | மொத்த மாறும் செலவு (TVC) | சராசரி நிலையான செலவு (AFC) | சராசரி மாறும் செலவு (AVC) |
|---|---|---|---|---|---|
| 0 | 50 | | | | |
| 1 | 70 | | | | |
| 2 | 100 | | | | |
| 3 | 120 | | | | |
| 4 | 135 | | | | |
| 5 | 150 | | | | |
| 6 | 160 | | | | |
| 7 | 165 | | | | |

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3. i. நிறைபோட்டி நிறுவனமொன்று ஏன் விலை ஏற்போனாகக் காணப்படுகின்றது? விளக்குக.

(4 புள்ளிகள்)

ii. நிறைபோட்டி நிறுவனமொன்றின் நிரம்பல் கோடு எவ்வாறு பெறப்படுகின்றது எனக் காட்டுக.

(4 புள்ளிகள்)

iii. விலைபேதப்படுத்தல் என்பதிலிருந்து நீர் எதனை விளங்கிக் கொள்கின்றீர.

(4 புள்ளிகள்)

iv நிறைபோட்டி மற்றும் தனியுரிமை சந்தை அமைப்புக்களினது குறுங்கால, நீண்ட கால சமநிலைகளை விளக்குக.

(8 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4. i. வெளிநாட்டுத் துறையுடனான பொருளாதாரத்தில் வருமான சுற்றோட்டத்தின் பங்கு என்ன? வரைபடம் மூலம் காட்டுக.

(06 புள்ளிகள்)

ii. உட்பாச்சல், வெளிப்பாச்சல் என்பவற்றை வரையறுத்து, நான்கு துறை பொருளாதார மாதிரி ஒன்றின் பேரினப் பொருளாதார சமநிலையில் உட்பாச்சல் வெளிப்பாச்சலுக்கு சமமாக இருக்கும் எனக் காட்டுக.

( 06 புள்ளிகள்)

LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

**iii.** பொருளாதாரம் ஒன்றின் வருமானம்(Y) நுகர்வுச் செலவு(C) பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| வருமானம்(Y) | நுகர்வுச் செலவு(C) |
|---|---|
| 1000 | 1500 |
| 4000 | 3400 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1. எல்லை நுகர்வு நாட்டம்( MPC)
2. நுகர்வுத் தொழிற்பாடு
3. தன்னிச்சை நுகர்வின் பெறுமதி
4. சராசரி நுகர்வு நாட்டம் (APC)

( 8 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**5.** பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பெழுதுக.

1. நாணயக் கொள்கை
11. பணவீக்க இடைவெளி
111. வேலையின்மையின் வகைகள்
1v. வணிக வங்கிகளின் பிரதான பணிகள்

(5x4 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)